**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,</u>**

**<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>**

MCOP No:73/2023 நாள் 04.02.2025.

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய எம.சா.2 ன் வாக்குமூலம். 1969ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது பிரிவு 6வது ஏற்பாட்டின்படி திரு.சேவகபாண்டியன், இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமரேசன் | -- | |
| த-பெ | | சமயம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | |

முதல் விசாரணை

நான் தற்போது திருவில்லிபுத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தட்டச்சராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கில் வட்டார போக்குவரத்து அலுவலருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பெயரில் அவர் கொடுத்த அங்கீகார கடிதத்தின் படி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். திருவில்லிபுத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலர் எனக்கு வழங்கிய அங்கீகார கடிதம் **எமசாஆ 6**. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஒட்டுநரான விருதுநகர் மாவட்டம் திருவில்லிபுத்தூர் ஓடை தெருவில் குடியிருக்கும் காளிராஜ் குமாரர் சக்தி விஜயன் என்பவரின் ஒட்டுநர் உரிமம் தொடர்பான எங்களது அலுவலக ஆவணம் **எமசாஆ 7**. TN 72 AW 2840 என்கிற 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு 04.11.2022 ம்தேதியில் ரூ.500 + 4500 + 10+ 250 அபராதமாக எங்கள் அலுவலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது அதற்கான பதிவேடு நகல் **எமசாஆ 8.** விபத்து தேதியான 12.10.2022 அன்று 1ம் எதிர்மனுதாரரின் வாகனமான டிராக்டர் மற்றும் டிரைலரை ஒட்டி சென்ற சக்தி விஜயனுக்கு அன்றைய தேதியில் இலகுரக வாகனம் ஒட்டுவதற்கு மட்டும்தான் உாிமம் உள்ளது. மேற்படி டிராக்டர் வாகனம் விவசாய பயன்பாட்டிற்கு என்பதால் இலகுரக வாகன ஒட்டுநர் உாிமத்தை வைத்தே டிராக்டரை ஒட்டிக்கொள்ளலாம். ஆனால் டிராக்டரை வணிக பயன்பாட்டிற்கு பயன்படுத்தினால் தனியாக பேஜ் வாங்கவேண்டும். மேற்படி டிரைலருக்கு பதிவெண் இல்லாமலும் இன்சூரன்ஸ் காப்பீடு இல்லாமலும் அபராதம் செலுத்தியுள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வாகனத்தை பரிசோதனை செய்து ஏதாவது குறைபாடு இருந்தால் அபராதம் போடுவார்கள்.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 04th day of February 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**